“அனைத்துலக ஈழத் தமிழர் மாநாடு” - பெங்களூர்

பேரன்புடையீர்,

வணக்கம்!

இலங்கையில் நடைபெற்றுவரும் போர் மூலமாக, எங்கள் ஈழத் தமிழ் இனத்தின் உரிமைகள் அனைத்தையும் முற்றாக இழந்து விடுவோமோ என்கிற அச்சம் ஏற்பட்டு உள்ளது. ஈழத் தமிழர்களின் எதிர்காலம் என்ன நிலையை அடையும் என்று யாராலும் கணித்துக் கூற முடியாத அளவு பேரழிவுகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. குறிப்பாக, இந்தப் போர் முடிவுக்கு வரும்போது, ஈழத் தமிழ் மக்கள் அரசியல் தலைமையே அற்ற இனமாகவும், சிங்கள ஆட்சியாளர்களுக்கு அடிமைப்பட்ட இனமாகவும், அந்த மண்ணில் பாதுகாப்பு என்பதே இல்லாத ஓர் இனமாகவே வாழ வேண்டிய நிலை ஏற்படும்

எனவே, போரை முடிவுக்குக் கொண்டு வரவும், எங்கள் இனத்தின் எதிர்காலம் குறித்து தீர்மானிக்கவும் மாநாடு ஒன்றினை நடத்தத் திட்டமிட்டுள்ளோம். ஈழத் தமிழர்களின் பிரதிநிதிகள்(கட்சிகள் மற்றும் இயக்கங்கள்), வெளிநாடுகளில் வாழும் ஈழத்து அறிஞர்கள், சமூக அக்கறையுள்ளவர்கள், அரசு சாரா தொண்டு நிறுவனங்களைச் சார்ந்தவர்கள், மற்றும் இந்தியாவில் அகதிகளாக இருப்பவர்கள் முதலான பல தரப்பிரனரும் பங்குபெறக் கூடியதாக இந்த மாநாட்டினை நடத்த தீர்மானித்துள்ளோம்.

“அனைத்துலக ஈழத் தமிழர் மாநாடு” என்னும் பெயருடன் நடைபெறவுள்ள இந்த மாநாட்டில் மேற்கொள்ளப்படும் முடிவுகளை இந்திய மத்திய அரசிடமும், பிறநாடுகளிடமும் கையளித்து அந்தத் தீர்மானங்களைச் செயல்வடிவில் நிறைவேற்றித் தரும்படி கோரவுள்ளோம். இம்மாநாட்டில் முழுக்க முழுக்க ஈழத் தமிழர்கள் மட்டுமே கலந்துகொள்வார்கள்.

2009 சித்திரை(ஏப்ரல்) மாதம் 11, 12 ஆம் திகதிகளில் கர்நாடகாவின் பெங்களூருவில் நிகழவிருக்கும் இந்த மாநாட்டில் தாங்களும் பங்குபெற வேண்டும் என அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

- ஈழத் தமிழர்கள் மீது தொடரப்பட்டுவரும் இனப்படுகொலைப் போரை உடனே தடுத்து நிறுத்திட வேண்டும்.

- சிங்கள ஆட்சியாளர்களால் பறிக்கப்பட்டுவிட்ட ஈழத் தமிழர்களின் அடிப்படை உரிமைகள் அனைத்தையும் மீட்டெடுக்க வேண்டும்.

- கடந்த சில ஆண்டுகளில் இந்தோனேசியாவிலிருந்து கிழக்கு திமோர் நாடும் - செர்பியாவிலிருந்து கொசோவா நாடும் விடுதலை பெற்றுள்ளன. எங்கள் ஈழத் தமிழ் இனத்தைப் பொறுத்து என்ன நிலைப்பாட்டை எடுக்கலாம் என்பதை இந்த மாநாடு விவாதித்துத் தீர்மானிக்க வேண்டும்.

- இந்த மாநாடு மூலம் ஈழத் தமிழ் இனத்துக்கான அரசியல் தலைமை ஒன்றினை ஏற்படுத்த வேண்டும்.

இந்தக் கருத்தோட்டங்களுக்கு ஏற்ப தங்கள் ஆலோசனைகளும், தீர்வுகளும் கொண்ட கட்டுரைகளைச் சுருக்கமான அளவில் இந்த மாநாட்டில் தாங்கள் படிக்கலாம், சமர்ப்பிக்கலாம் எனவும் தெரிவித்துக்கொள்கிறோம்.

மாநாட்டில் கலந்துகொள்பவர்களுக்கு தங்குமிடம், மற்றும் உணவு, போன்றவற்றுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தங்களின் வருகைக்கு உரிய ஒப்புதலை உடனே ∴பேக்ஸ் (FAX) அல்லது மின் அஞ்சல் மூலம் எங்களுக்கு எட்டவிடுமாறு வேண்டிக்கொள்கிறோம்.

பொறுத்திருந்து பார்க்கலாம் என்றால் நாம் அனைவரும் நிரந்தர நாடற்றவர்களாவோம். இந்த மாநாடு ஈழத் தமிழர் அனைவருக்கும் பொதுவானது. கட்சி, இயக்க பேதங்களை மறந்து அனைவரும் பங்களிக்க வேண்டும் என்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

மாநாடு இடம்:இந்திராகாந்தி சர்வதேச பாடசாலை,(IGIA)
10/2, யக்கூர், யலகங்கா,
பெங்களூர் – 64.

திகதி: 11,12 – 04 - 2009

நேரம்:காலை மணி 10-00 முதல்
இரவு மணி 10-00 வரை

பெங்களூர்,
18-03-2009

Phone & Fax :-
0091 - 44 - 45576785

Email address:-
auetm@hotmail.com

தங்கள் அன்பார்ந்த,

(ஞா.ஞானசேகரன்)
தலைவர்
ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி
(ஈ.என்.டி.எல்.எப்.)

V.Ramaraj

Mob 00 44 7817063682

Res: 00 44 208 930 4826

vramaraj@hotmail.com
vramaraj@gmail.com